[1992 மார்ச் 12

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் கிழக்குப் பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்க சாத்தியக் கூறுகள் இருப்பின், ஆத்தூர் ஒன்றியத்திடம் இருந்து மேற்சொன்ன தீர்மானங்களைப் பெற்று முழு வடிவில் பிரேரணை ஒன்றை அனுப்புவீர்களேயானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 198, திரு. எஸ். அன்பழகன், திருமதி கே. மரியமுல் ஆசியா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

198

நாமக்கல்லில் ''ஆட்டோ நகர்''

*1740—திரு. எஸ். அன்பழகன் :

திருமதி கே. மரியமுல் ஆசியா : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நாமக்கல் பகுதியில் லாரி உற்பத்தி அதிகமாக செய்யப்படுவதால் வாகனங்களுக்கான உதிரி பாகங்கள் தயார் செய்வதற்கு ''ஆட்டோ நகர்'' ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தமிழக வரலாற்றின் பொற்கால முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அமைச்சரவையில் பணியாற்ற வாய்ப்புத் தந்த தமிழ்த் தாயின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்,

(அ) ஆம்,

(ஆ) நாமக்கல் ஆட்டோ நகர் சங்கம், தொழிற்பேட்டை அமைப்பதற்கான தேவையான நிலங்கள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டபின் தொழிற்கூடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் கேள்வியிலே நல்ல பதில் கொடுத்துள்ளார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு அந்த ஆட்டோ நகர் சங்கத்திற்கு எத்தனை

1992 மார்ச் 12]

ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் என்பதையும், அதற்கான எஸ்டிமேட் எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாமக்கல் ஆட்டோ நகர் சங்கம் 'சிட்கோ' வின் உதவியின் மூலம் நாமக்கல் அருகில் வள்ளிபுரம் என்ற தனியார் தொழிற்பேட்டை ஒன்றை சுமார் 65 ஏக்கர் நிலப் பரப்பில் நிறுவ முன் வந்துள்ளது, அந்த ஆட்டோ நகர் சங்கம் அமைப்பதற்கு 65 ஏக்கர் நிலம் மொத்தப் பரப்பளவாகக் கொண்டு இதுவரை 39.73 ஏக்கர் நில உரிமையாளர்களிடமிருந்து பெறப் பட்டுள்ளது, அரசினுடைய புறம்போக்கு நிலம் 5.51 ஏக்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வாங்குவதற்கு முயற்சி எடுக் கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியமுல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களை விட தமிழ்நாட்டில் இருந்துதான் அதிக அளவில் லாரிகள் இந்தியா முழுவதற்கும் செல்கின்றன, தமிழ்நாட்டில் நாமக்கல், கரூர், திருச்செங்கோடு போன்ற பகுதிகள் அதிக அளவு லாரி தொழிலை நம்பித்தான் இருக்கின்றன. நாமக்கல்லில் ஏற்படவிருக்கின்ற ஆட்டோ நகரைப் போன்று மற்ற இடங்களில் ஏற்படுத்த அர சிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 195 திரு. இரா. தாமரைக்கனி. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

195—

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி,

*192 திரு. இரா. தாமரைக்கனி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்—கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டத்தில். 'தாட்கோ' மூலமாக நடப்பு ஆண்டில் வீடு இல்லாத ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் உள்ளதா ?